1972 மார்ச் 24]

காலனிக்கு அருகில் ஒரு கள்ளுக்கடை இருப்பதால் எல்லோரும் குடித்து விட்டு அந்த ரோடு வழியாகப் போகிறார்கள். பகல் நேரங்களில்கூட இம் மாதிரியான திருட்டுகள் நடைபெறுகின்றன. அப்படி அயலார் நகருக்குள் வராத அளவிற்கு அந்தக் காலனியின் பின்பக்கமாகக் காம்பவுண்ட் வைத்து தக்க பாதுகாப்பு செய்து கொடுக்க முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தாதண்டர் நகரைப் பொறுத்தவரையில், ஓராண்டுக காலத்தில் இதுபோன்ற வீடுபுகுந்து திருடுதல் என்கின்ற இந்தக் குற்றங்கள் 7 நடைபெற்றுஇருக்கின்றன. அதில் 4 கண்டுபிடிக்கப்பட்டு, வழக்குத் தொடரப்பட்டு, குற்றவாளிகளும் தண்டிக்கப் பட்டிருக்கிறார்கள். இரவில் இரண்டு ரோந்து காவலர்கள் போடப்பட்டு, இரவு 11 மணி முதல் விடியற்காலை 5 மணி வரையில் அவர்கள் குறிப்பிட்ட இடங்களில் ரோந்து வருகிறார்கள். தாதண்டர் நகர் மாத்திரமல்ல. சென்னை யில் 12 தொகுதிகளிலும் ரோந்து வேன்கள் கடந்த ஆண்டிலிருந்து புதிதாக விடப்பட்டு, அந்த ரோந்து வேன்களும் சுற்றிக்கொண்டிருக்கின்றன. மேலும் காவல் துறையினர் இந்த விஷயங்களில் மிகவும் கண்காணிப்பாக இருக்கவேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள். தாதண்டர் நகரைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் சொன்ன யோசனைகள் பரி சீலிக்கப்பட்டு, ஆவன செய்யப்படும்.

* 667 Q.—Thiru K. T. K. THANGAMANI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether it is a fact that a piece goods merchant was relieved of Rs. 10,000 on 23rd July 1971 in Tiruchirappalli; and

(b) if so, the steps taken to book the culprits?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) திருச்சிராப்பள்ளியில், துணி வியாபாரி ஒருவரிடம் பணி புரிந்து வந்த எழுத்தர் ஒருவரிடமிருந்து ரூ. 15,600 களவாடப்பட்டது.

(இ) உள்ளூர் காவலர்கள் புலனாய்வு செய்ததில், திருவெறும்பூரைச் சேர்ந்த ஒருவர் இத்திருட்டுக்குக் காரணமாயிருந்தார் என்று தெரியவந்தது. அவர் கைது செய்யப்பட்டு, திருச்சிராப்பள்ளி 1-வது துணை மாஜிஸ்ரேட்டின் முன்பு குற்றப் பத்திரிகை ஒன்று பதிவு செய்யப்பட்டது. அவர் குற்ற வாளிக்கு நான்கு மாதக் கடுஞ் சிறைத் தண்டனை விதித்தார்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, அந்தக் குமாஸ்தா கடையிலிருந்து வந்தபோது பட்டப் பகலிலே திருட்டு நடந்ததாகத் தெரி கிறது. அவர் கைது செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டாரா ? குற்றவாளியிட மிருந்து எவ்வளவு ரூபாய் மீட்கப்பட்டது? அது பறிகொடுத்தவர்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்பட்டதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, திருடியவர் வேறு மாநிலங்களுக்கு எல்லாம் ஓடினார். பிறகு கைது செய்யப்பட்டார். மொத்தப் பணம் 15,600 ரூபாயில் 11,025 ரூபாய் அவரிடமிருந்து மீட்கப்பட்டு, உரியவரிடம் கொடுக்கப்பட்டது.